# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097136

1. District : Krishnagiri மாவட்டம் PS: V&AC காவல்நிலையம் Year: 2018 ஆண்டு FIR No.: 10/Ac/2018 மு.த.அ. எண் Date: 13.12.2018 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: the PC (Amended) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 12.11.2018.
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 05.12.2018.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.12.2018 Time : நேரம் 10.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.12.2018 Time : நேரம் 10.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Oral.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Office of the Deputy Director, Town and Country planning, Dharmapuri, 50 km South approximately
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S District
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. M. Govindaraj (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Munusamy
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 43 years (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
   (f) Occupation : தொழில் Real Estate (g) Address : முகவரி V.I.P. Nagar, Chennai Salai, Krishnagiri

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tmt. Vasanthi, Deputy Director, Town and Country planning Dharmapuri,
   2) Tr. Manikandan, Supervisor, o/o Deputy Director, Town and Country planning, Dharmapuri.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   Delay occured for arranging the amount Rs.75,000/- demanded by the accused.

GCP 240-34(Type 2) 90 000 Cps.-21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. சௌந்திரராஜ் [signature] — [signature] 13/12/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.12.2018 / 15.00hrs

Name: பெயர் G.V KIRUSHNAA RAAJAN
Rank: நிலை DSP ……No. எண் ………
V&AC, Krishnagiri

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 10/AC/2018 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி**

கிருஷ்ணகிரி, சென்னை சாலை, வி.ஐ.பி நகரில் குடியிருக்கும் முனுசாமி அவர்களின் மகன் திரு.எம்.கோவிந்தராஜ், (வயது 43) என்பவர் இன்று 13.12.2018 ம் தேதி வியாழக்கிழமை பகல் 10.00 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி காவல் துணைக் கண்காணிப்பாளரிடம் வாய்மொழிப் புகார் ஒன்றை கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளின் பொதுவான நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் சரியில்லை என்றும் புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் அவருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரிய வந்ததால், புகார் வாக்குமூலத்தின் தன்மைப்படி, இன்று 13.12.2018ம் தேதி பகல் 13.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.10/AC/2018 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு.

நான் கிருஷ்ணகிரி, சென்னை சாலையிலுள்ள வி.ஐ.பி நகரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு எழுத படிக்கத் தெரியாது. கையொப்பம் மட்டும் போடுவேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். கிருஷ்ணகிரி அச்சமங்கலத்தைச் சார்ந்த திரு.கேசவன் என்பவருக்கு சொந்தமான கிருஷ்ணகிரி கட்டினாயனப்பள்ளி கிராமத்திலிருக்கும் 1.10 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கி பிளாட் போட முடிவு செய்தேன். அந்த நிலத்தை வாங்குவதற்காக நான் கேசவனிடம் ரூ.32,75,000/- க்கு விலைபேசி அவருக்கு முன் பணமாக ரூ.9 லட்சம் கொடுத்துள்ளேன். இது தொடர்பாக நான் கடந்த 16.12.2015 தேதியன்று கேசவனிடம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளேன். அதன்பிறகு மோகன் என்ற என்ஜினியர் மூலம் அந்த லேஅவுட்டில் மொத்தம் 31 பிளாட்கள் போடப்பட்டது. அதில் 3 பிளாட்களை விற்றுவிட்டேன். மீதமிருந்த 28 பிளாட்டில் 3 பிளாட்கள் பூங்கா, விளையாட்டு மைதானம், கோயில் போன்ற தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 25 பிளாட்டுகளுக்கு

அப்ரூவல் வாங்க வேண்டியிருந்தது. அதற்காக மோகன் என்ஜினியரிடம் தேவையான ஆவணங்களை கொடுத்தேன். அவர் இடத்தை நேரில் ஆய்வு செய்துவிட்டு ஆன்லைனில் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.12,500/- ஐ கேசவன் பெயரில் செலுத்தினார். பிறகு மோகன் என்ஜினியர் அந்த ஆவணங்களுடன் 24.07.2018ம் தேதி தருமபுரியிலுள்ள நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் கொடுத்தார். அன்றைய தினம் அந்த அலுவலகத்தில் அந்த விண்ணப்பத்திற்கு 1761 ஆக நெம்பர் வழங்கப்பட்டுள்ளதாக மோகன் என்ஜினியர் என்னிடம் சொன்னார். அதன்பிறகு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு தருமபுரி நகர ஊரமைப்பு ஆபிசில் மேற்பார்வையாளராக பணிபுரியும் மணிகண்டன் என்பவர் கிருஷ்ணகிரிக்கு வந்து லேஅவுட்டை பார்வையிட்டு சென்றார். அதன்பிறகு பிறகு நானும் கேசவனும் கடந்த 12.11.2018 ம் தேதியன்று தருமபுரிக்குச் சென்று துணை இயக்குநர் வசந்தி அவர்களையும் மேற்பார்வையாளர் மணிகண்டன் அவர்களையும் சந்தித்து எனது லேஅவுட் அப்ரூவல் பற்றி கேட்டேன். அப்போது மணிகண்டன் லேஅவுட்டிற்கு அப்ரூவல் வாங்கித் தர வேண்டுமானால் தனக்கும் அதிகாரிகளுக்கும் பணம் ரூ.3 லட்சம் தனியாக தர வேண்டுமென்று கேட்டார். அதற்கு நான் பிளாட் அப்ரூவல் செய்வதற்கு எதற்காக சார் நான் ரூ.3 லட்சம் தரவேண்டும் என்று சொல்லிவிட்டு நானும் கேசவனும் வந்துவிட்டோம். பின்பு 19.11.2018 ம் தேதியன்று தருமபுரிக்கு சென்று துணை இயக்குநர் வசந்தியிடம் எனது லேஅவுட் அப்ரூவல் பற்றி கேட்டேன். அப்போது வசந்தி என்னிடம் மணிகண்டன் என்ன சொன்னார் என்று கேட்டார். அதற்கு அவர் ரூ.3 லட்சம் கேட்பதாக சொல்லி அவ்வளவு செய்ய முடியாது என்று சொன்னேன், அதற்கு அவர் இது தொடர்பாக மீண்டும் மணிகண்டனிடம் பேசிவிட்டு வருமாறு சொன்னார். அதன்படி நான் மணிகண்டனை சந்திந்து விவரம் சொன்னபோது, அவர் எனது கோப்பு காணவில்லை என்றும் தேடி எடுத்தபிறகு பார்ப்போம் என்று சொன்னார். அந்த கோப்பு தேடி எடுக்கப்படும் வரை நான் அங்கேயே இருந்தேன். பிறகு இரவு நேரமாகிவிட்டதாலும் அவர்கள் கேட்ட பணத்தை நான் கொடுக்காததால் அதை மனதில் வைத்துக் கொண்டு மணிகண்டன் எனக்கு எந்த பதிலும் சொல்லாததாலும் நான் வந்துவிட்டேன். பின்பு கடந்த 05.12.2018 ம் தேதியன்று மீண்டும் தருமபுரிக்குச் சென்று துணை இயக்குநர் வசந்தி அவர்களை சந்தித்து எனது லேஅவுட் அப்ரூவல் பற்றி கேட்டேன். அப்போது என்னிடம் அவர் உனது பைல் நெம்பர் என்ன என்று கேட்டார். நான் 1761 என்று சொன்னேன். அதன்பின்பு மேற்பார்வையாளர் மணிகண்டனை பார்த்துவிட்டு வருமாறு சொன்னார். அதன்படி நான் மணிகண்டனை

பார்த்தபோது மீண்டும் ரூ.3 லட்சம் பற்றி கேட்டார். அதற்கு நான் என்னால அவ்வளவு தொகை ரெடி பண்ணமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் முதல் தவனையாக எனக்கு ஒரு தொகையும் துணை இயக்குநர் அவர்களுக்கு தனியாக ஒரு தொகையும் தருமாறு கேட்டார். எவ்வளவு தரவேண்டும் நான் கேட்டதற்கு, மணிகண்டன் தனக்கு ரூ.50,000/- முன் பணமாக தருமாறும், துணை இயக்குநரை சந்தித்து அவர் எவ்வளவு சொல்கிறாரோ அதை அவரிடமும் தருமாறு சொன்னார். பிறகு நான் துணை இயக்குநர் வசந்தியை சந்தித்து மணிகண்டன் சொன்ன விவரத்தை சொன்னேன். அதற்கு அவர் தனக்கும் தனியாக ரூ.50,000/- தரவேண்டும் என்று சொன்னார். நான் அவரிடம் கெஞ்சி கேட்டதற்கு சரி ரூ.25,000/- முதல் தவணையாக எனக்கு கொடுத்துவிடு டைரக்டர் ஆபிசிலிருந்து அப்ரூவல் ஆர்டர் கிடைத்த பிறகு மறக்காமல் மீதித் தொகை ரூ.25,000/- தந்துவிட வேண்டும் என்று சொன்னார். பிறகு மீண்டும் மணிகண்டனை சந்தித்து மேடம் அவருக்கு தனியாக ரூ.50,000/- கேட்டு அதில் ரூ.25,000/- அட்வான்சாக தரச் சொல்லியிருக்கிறார்கள். நீங்களும் அதேபோல் கொஞ்சம் குறைத்து சொல்லுங்க சார் என்று சொன்னதற்கு, முடியாது ரூ.50,000/- ஐ முழுமையாக தரவேண்டும் என்று சொன்னார். இல்லையென்றால் நீ எவ்வளவு நாட்கள் நடந்தாலும் உன் வேலையாகாது என்று சொல்லிவிட்டார். அவர்களுக்கு தர வேண்டிய லஞ்ச பணத்தை என்னால் உடனடியாக தயார் செய்யமுடியாததால் நான் இவ்வளவு நாட்களாக தங்களிடம் புகார் கொடுக்க வர முடியவில்லை. துணை இயக்குநர் வசந்தி லஞ்சமாக கேட்ட அட்வான்ஸ் பணம் ரூ.25,000/- மும் மேற்பார்வையாளர் மணிகண்டன் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.50,000/- ஆக மொத்தம் ரூ.75,000/- ஐ தற்போது ரெடி பண்ண முடந்தது. அவர்கள் இருவருக்கும் லஞ்சமாக பணம் கொடுத்து எனது வேலையை எனக்கு முடிக்க விருப்பமில்லை. அவர்கள் கேட்ட பணத்துடன் இன்று அவர்களை சந்திக்க முடிவு செய்துள்ளேன். எனவே என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட துணை இயக்குநர் வசந்தி மற்றும் மேற்பார்வையாளர் மணிகண்டன் ஆகியோர்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். படிக்கக் கேட்டேன். நான் சொன்னபடி சரியாக உள்ளது. ஒப்பம் திரு.எம்.கோவிந்தராஜ், 13.12.2018.

[signature] 13/12/18

(G.V. KIRUSHNAA RAAJAN)
Dy. Supdt. of Police
Krishnagiri VAC.